**O.S. No.21/2019**

**14.11.2025**

**பி.சா. 1**

**திரு வீரசிங்கம்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தாய்வழி பாட்டனார் ரெகுநாத தேவர் அவர்களால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரி. ரெகுநாத தேவரின் மனைவி கண்ணம்மாள் என் பாட்டியாவார். ரெகுநாத தேவர் கண்ணம்மாள் தம்பதிகளுக்கு ஒரே மகள் என் தாயார் நவனீதம் என்றால் சரி. தாவா சொத்துக்கள் அனைத்திற்கும் என் தாயார் நவனீதம் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரி. என் தந்தையார் சிவானந்தம் செருமடார் என்றால் சரி. என் தகப்பனாருக்கு ஆண் வாரிசுகள் இருவர் என்றால் நானும் பிரதிவாதியும் ஆவோம், பெண் வாரிசுகள் 6 பேர். என் தாயார் 20.01.2016 லும் என் தந்தையார் 01.03.2016 லும் இறந்துவிட்டார்கள் என்றால் சரி. என் பாட்டி கண்ணம்மாள் 26.01.1988 ல் இறந்து விட்டார். என் தாயார் நவநீதம் மற்றும் என்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:15 +0530

பாட்டி கண்ணம்மாள் இருவரும் சேர்ந்த 20.09.1987 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலாவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் பதிவு செய்யவில்லை. உயிலில் கண்டுள்ள சொத்துக்களை நானும் என் சகோதரரும் சரிசமமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொள்ளவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் கூறப்பட்ட சங்கதிகள் எதுவும் தெரியாது என்றால் சரி. எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணைக்கு நான் வழக்கறிஞருக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை. நான் என்னுடைய சகோதரர் மீது மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.13 மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதி மற்றும் மோதி ராம்குமார் ஆகியோர் மீது போடப்பட்ட வழக்குரை என்றால் சரி. 07.05.2009 ல் என் தாயார் உயிருடன் இருந்த காலத்தில் ஒரு புல எண் கொண்ட சொத்தை விற்பனை செய்துள்ளார். விற்பனை செய்தது செல்லாது என்றுதான் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:24 +0530

வழக்கறிஞருக்கு சொல்லியதுதான் என்றால் சரி. வா.சா.ஆ.13 ல் 20.09.1987 ல் எனது பாட்டியாரும் எனது தாயாரும் உயில் எழுதி வைத்துள்ளார்கள் என்றும் அவர்கள் காலத்திற்கு பிறகு உயில்படி சொத்து எனக்கும் வாதிக்கும் சொந்தம் என்றும் அதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பக்கம் 2 ல் கூறியுள்ளேன் என்றால் சரி. அதே உயில்தான் இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. உயிலில் கண்டுள்ள சொத்தில் ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்காக மன்னார்குடி இந்தியன் வங்கியில் கடன் பெற்றுள்ளோம் என்றால் சரி. அந்த கடனுக்கு நானும் வாதியும் எனது தாயாரும் கையொப்பங்கள் போட்டுள்ளோம் என்றால் சரி. கடனை திரும்ப செலுத்தவில்லை என்று மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் எங்கள் மீது மன்னார்குடி இந்தியன் வங்கியால் வழக்கு தொடரப்பட்டது என்றால் ஆமாம். என் பாட்டியோ தாயாரோ சேர்ந்து எழுதி வைத்த உயிலை பொறுத்து என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் மறுத்து சொல்லப்படவில்லை என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. முதல் விசாரணை மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் ஆமாம். உயிலில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்துதான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:30 +0530

வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. உயிலில் கண்டுள்ள சொத்துக்கள் எனக்கும் வாதிக்கும் உரிமையுள்ளதால் அதில் சரிபாதி வீதத்தை பாக பிரிவினை கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பஞ்சாயத்தில் பேசியபோது பாதி பங்கிற்கு ஒத்துக்கொண்டு கையொப்பம் இட்டதை வாதி வைத்துள்ளார், என்வசம் இல்லை. 3 சர்வே நம்பர் எனக்கு, 4 சர்வே நம்பர் வாதிக்கு என பேசப்பட்டது. மோதி ராம்குமாருக்கு என் தாயாரால் 07.05.2009 ல் விற்பனை செய்யப்பட்ட சொத்தை தவிர மற்ற சொத்துக்கள்தான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை நானும் வாதியும் சேர்ந்து சாகுபடி செய்து வருகிறோம் என்றால் நான்தான் செய்து வருகிறேன். உயில்படி தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்து என்றால் கூட்டு அனுபவம் இல்லை. தாவா சொத்துக்களில் எனக்கு ஒரு பாதியும் வாதிக்கு ஒரு பாதியும் உரிமையுள்ளது என்றால் தவறு. வா.சா.ஆ.2 ல் எனக்கும் வாதிக்கும் சரிசமமாகத்தான் சொத்து கண்டுள்ளது எனவும் என்னுடைய சகோதரிகளுக்கு சொத்து இருப்பதாக குறிப்பிடப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. என் பாட்டி கண்ணம்மாளும் என் தாயார் நவனீதமும் சேர்ந்து எழுதி வைத்த உயிலில் பெண் வாரிசுகள் பாகம் கோர இயலாது எனவும் என் சகோதரிகள் இந்த வழக்கிற்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:36 +0530

தேவையற்ற தரப்பினர் என்பதால் சேர்க்கப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. பி.சா.ஆ.4 ல் வாதியால் எனது தந்தை சிவானந்தத்திற்கு சொந்தமான சொத்தை பொறுத்து 1/8 பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரி. பி.சா.ஆ.4 ல் கண்டுள்ள சொத்து என் தந்தைக்கு சொந்தமான சொத்து என்றால் சரி. என் தாய் தந்தையருக்கு மொத்தம் 8 பேர் வாரிசுகள் என்றால் சரி. என்னுடைய தந்தை அவரது சொத்தை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டார். என் தந்தைக்கு சொந்தமான சொத்தை பொறுத்து 8 பாக உரிமை உள்ளது என்றால் சரி. என் தந்தை சிவானந்தம் செருமடாருக்கு சொந்தமான சொத்தை பொறுத்து இந்த வழக்குரையில் வாதியால் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரி. என் தாயாருக்கும் அவரது தாயாருக்கும் சொந்தமான சொத்துக்களைதான் வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஒரு புல எண் விடுபட்டுள்ளது என்றால் 07.05.2009 ல் மோதி ராம்குமாருக்கு என் தாயாரால் விற்பனை செய்யப்பட்டது. என் தாயார் உயிருடன் இருந்தபோது விற்பனை செய்துள்ளதால் அந்த சொத்து பாகபிரிவினைக்கு உட்பட்டதல்ல என்றால் தவறு. 07.05.2009 ல் என் தாயாரால் விற்பனை செய்யப்பட்ட சொத்தைதான் வழக்குரையில் விடுபட்ட சொத்தாக எதிர் வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன். வழக்குரையில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:43 +0530

கண்டுள்ள சொத்துக்களை ஆக்கிரமிக்கும் முயற்சியுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் தவறு. எனது குடும்பத்தில் படித்து வேலைக்கு சென்றவர் வாதிதான் என்றால் சரி. வாதி வேலைக்கு சென்றுதான் என் சகோதரிகளை திருமணம் செய்து கொடுத்தார் எனவும் எனக்கு பொருளாதார ரீதியாக வசதிகள் செய்து கொடுத்தார் எனவும் சொன்னால் தவறு. எனது தந்தையார் விவசாயம் செய்தார் என்றால் சரி. எனது சகோதரருக்கு வேலை கிடைத்ததற்கு பின்தான் திருமணமானது என்றால் சரி, அவருக்கு வேலை கிடைத்ததிலிருந்து வீட்டிற்கே வரவில்லை. வாதிக்குரிய பாகத்தை கொடுப்பதிலிருந்து மறுப்பதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. உயிலில் கொண்டுள்ள சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை நடைபெற்றுள்ளது என்பதற்கு எந்தவித ஆவணங்களும் என்னால் சமர்ப்பிக்கவில்லை என்றால் அது வாதியிடம் உள்ளது. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்றால் தவறு. சாட்சி தானாக என்னுடைய 6 சகோதரிகளில் 2 பேருக்கு என் அப்பா, அம்மா உயிருடன் இருக்கும்போது திருமணம் நடைபெற்றது, அப்பா, அம்மா உயிரோடு இருந்தும் அவர்களால் முடியாதபோது மீதம் உள்ள 4 சகோதரிகளுக்கு நான் திருமணம் செய்து வைத்தேன். என் சகோதரிகளுக்கு பெண் பார்ப்பது, திருமணம் போன்ற

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:49 +0530

விசேஷங்களுக்கு வாதி வந்தாரா என்றால் திருமணத்திற்கு மட்டும்தான் வந்தார். வாதியிடம் சம்பாதிப்பதை மீறி தொகை கேட்டதால் அவரால் கடன் வாங்க இயலாத சூழ்நிலையில் அவர் கொடுத்த தொகை கொண்டு திருமணம் செய்யலாம் என சொன்னார் என்றால் தவறு. எனது சகோதரர் வெளியில் சென்று வருமானம் ஈட்டிய தொகையை வைத்துதான் நான் என் சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் தவறு. எதிர் வழக்குரையில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் என் தந்தையார் சொத்தை பொறுத்து என்றால் தவறு. உயில் எழுதிய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.14 16:44:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.